மங்கள வைபவங்களுக்கு
தேவையான
பட்டுப் புடைவைகள்
மற்றும்
சிறுவர்களுக்கான
தெரிவுகளுக்கு
✻ சோபனா ✻
ஆடை அகம்
16, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள் நான்கு
Registered as a Newspaper
உதயன்
விலை ரூபா 5-00
சுடர் 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 வைகாசி 14 சனிக்கிழமை (28 - 5 - 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 181

இன்றைய அறிமுகம்!
நாளைய நாகரிகம்!!
ஆதிக்க ஆடைகளில்
சோபிக்க சோபனா
✻ சோபனா ✻
ஆடை அகம்
16, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

வடக்கே இராணுவ முகாம்களில் பணிபுரிய இந்தியாவில் பயிற்சி பெற்ற அதிகாரிகள்

டி. பீயின் கோரிக்கைக்கு இணங்க

சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் பதவியை துறப்பார்?

கொழும்பு, மே 28

தற்போது வெளிநாடு சென்றுள்ள சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் நாடு திரும்பியதும் பதவி துறக்கும்படி ஜனாதிபதியால் கோரப்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஐ. தே. க வட்டாரங்களை மேற்கோள் காட்டி ச. ஐலண்ட் பத்திரிகை இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

கட்சியின் தலைமைத்துவத்துக்கு எதிரான போக்கைக் கடைப்பிடித்து வரும் அமைச்சர்கள் சிலர், முதலில் அமைச்சரவை மாற்றத்தின் போது பதவி இழப்பர் என்று தெரிவிக்கப்படுகிறது.

சில அமைச்சர்கள் மீது பலவித குற்றச் சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. அக்குற்றச்சாட்டுகள் பற்றிய தகவலை விசாரணையின்றி வெளியிட முடியாது என்று கட்சிப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

தமிழரின் நூல்நிலையம் கனடாவில் எரிக்கப்பட்டது

கொழும்பு, மே 28

கனடாவில், ரொறொன்ரோ நகரில் தமிழர்களினால் நடத்தப்பட்டு வந்த 'தேடகம்' என்ற பெயரிலான நூல் நிலையம் இனந்தெரியாதோரால் எரிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நூல் நிலையத்தை நடத்தி வந்தவர்கள் 'தேடகம்' என்ற பெயரில் செய்திப்பத்திரிகை ஒன்றையும் நடத்தி வந்தனர் என்று கூறப்படுகிறது.

மேதினமன்று பாரிஸில் கொல்லப்பட்ட சபாரத்தினம் சபாலிங்கத்தின் மறைவை ஒட்டி கூட்டம் ஒன்றை இந்த நூல் நிலையம் ஒழுங்கு செய்திருந்ததே தாக்குதலுக்கு காரணம் என்று நம்பப்படுவதாக கொழும்பிலுள்ள தமிழ் வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-எ)

தலைமைத்துவத்தை விமர்சிக்கும்

அரச எம். பிகளுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை

கொழும்பு, மே 28

ஐக்கிய தேசியக்கட்சியின் தலைமைத்துவத்தையும் அதன் கொள்கைகளையும் பகிரங்கமாகவும் மறைமுகமாகவும் விமரிசித்து வரும் அரச எம். பிக்கள் மற்றும் ராஜாங்க அமைச்சர்களுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணைகளை ஆரம்பிக்க ஐக்கிய தேசியக்கட்சியின் செயற்குழு தயாராகி வருகிறது என்று அறிவிக்கப்படுகிறது.

விசாரணைக்கு உட்படுத்தப்படவிருப்பவர்களில் தேசியப் பட்டியல் எம். பிக்கள் சிலர், மாவட்ட எம். பிக்கள் பலர் மற்றும் ராஜாங்க அமைச்சர்கள் சிலரும் உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஒழுக்காற்று விசாரணைகளை தமது விருப்பத்திற்கு ஏற்ப நடத்துவதற்காகவே ஐ. தே. க. செயற்குழுவை மாற்றி அமைக்கும் முயற்சியை ஜனாதிபதி எடுத்து வருகின்றார் என்றும்—

ஒழுக்காற்று விசாரணைகளை ஆரம்பிக்கும் சமயம் செயற்குழுவில் பெரும்பான்மையான உறுப்பினர்கள் தமது விசுவாசிகளாக இருக்கவேண்டும் என்பதில் ஜனாதிபதி உறுதியாக இருப்பதாகவும் — தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

காவல் நிலையம் மீது புலிகள் தாக்குதல்

திருமலையில் 2 சிப்பாய்கள் பலி

கொழும்பு, மே 28

திருமலை — ஹபரணை வீதியில் 125 ஆவது மைலில் இருக்கும் இராணுவ காவல் நிலையம் மீது கடந்த செவ்வாய்க்கிழமை காலை 6 மணியளவில் விடுதலைப் புலிகள் நடத்திய திடீர்த் தாக்குதலில் 2 சிப்பாய்கள் கொல்லப்பட்டனர் என்றும் —

ஒரு சிப்பாய் காயமடைந்தார் என்றும் அறிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகள் மறைந்திருந்து இத்தாக்குதலை நடத்தியதாகச் சொல்லப்படுகிறது;

மலத்தியோன் தெளிக்கும் வேலையை முழு அளவில் ஆரம்பிக்க முடியாத நிலை

ஆட்பலம் போதாதாம்

யாழ்ப்பாணம், மே 28

யாழ். குடாநாட்டில் மலேரியாவை ஒழிப்பதற்குத் தேவையான ஒரு பகுதி மலத்தியோன் கிடைத்துள்ள போதிலும், அதனைத் தெளிக்கும் வேலையை உடனடியாக முழு அளவில் ஆரம்பிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாம்.

மலத்தியோன் தெளிப்பதற்குத் தேவையான ஆட்களுக்கு பற்றாக்குறை நிலவுவதே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதனை அடுத்து, மலேரியாத் தடுப்பு இயக்கத்தில் இருந்து ஓய்வுபெற்ற வெளிக்கள உதவியாளர்களை மீண்டும் வேலைக்கு அமர்த்துவதற்கு வடபிராந்திய மலேரியாத் தடுப்பியக்க வைத்திய அதிகாரி டாக்டர் வே. சிவகுரு நடவடிக்கை எடுத்துள்ளார்.

இவர்களை நியமிப்பதற்கான அனுமதியை அவர் யாழ்:

(4 ஆம் பக்கம் பார்க்க)

உடனடியாக நியமிக்கப்படுவர்

தளபதி ஜெரி சில்வா தகவல்

கொழும்பு; மே 28

வடக்கில் உள்ள இராணுவ முகாம்களில் பணிபுரிவதற்கு இந்தியாவிலிருந்து விசேட பயிற்சி பெற்ற இராணுவ அதிகாரிகள் உடனடியாக நியமிக்கப்பட உள்ளனர்.

கிழக்கில் உள்ள இராணுவ முகாம்களுக்கும் இந்தியாவில் பயிற்சி பெற்ற அதிகாரிகள் அனுப்பப்படுவர்;

இராணுவத் தளபதி ஜெனரல் ஜெரி டி சில்வா இத்தகவலைத் தெரிவித்துள்ளார்;

ஸ்ரீலங்கா இராணுவத்தைச் சேர்ந்த சுமார் 400க்கும் மேற்பட்ட உயர்நிலை, நடுநிலை அதிகாரிகள், இந்தியாவில் பலவிதமான துறைகளில் விசேட பயிற்சி பெற்று அண்மையில் நாடு திரும்பி உள்ளனர்.

இவர்களில் பெரும்பகுதியினர் வடக்கில் உள்ள இராணுவ முகாம்களுக்கு உடனடியாக அனுப்பபடுவர் என்றும் —

மிகுதியானோர் கிழக்கிற்கு அனுப்பப்படுவர் என்றும்— இராணுவத் தளபதி கூறியுள்ளார்.

இந்தியாவில் விசேட பயிற்சி பெற்ற மரபு வழி இராணுவப் போராட்டப் பயிற்சியோடு கெரில்லா எதிர்ப்புப் போர் பயிற்சியும் பெற்று வந்துள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

உலகில் மோதல்கள் இடம்பெறும் பகுதிக்கு ஆயுதவிற்பனை இல்லை

தென்னாபிரிக்க புதிய அரசு அறிவிப்பு

வாஷிங்டன், மே 28

உலகில் மோதல்கள் இடம் பெறும் பகுதிகளுக்கு தென்னாபிரிக்கா ஆயுதங்களை விற்காது.

தென்னாபிரிக்காவின் முதலாவது உப ஜனாதிபதி திரு. தபோ எம்பெகி ஐ.நா அலுவலகத்தில் செய்தியாளர்கள் மத்தியில் பேசும்போது முன்கண்டவாறு அறிவித்தார்.

தென்னாபிரிக்கா மீது விதிக்கப்பட்டிருந்த ஆயுதத் தடையை ஐ. நா. பாதுகாப்புச்சபை கடந்த புதன்கிழமை நீக்கியதைத் தொடர்ந்து, தென்னாபிரிக்காவின் ஆயுத ஏற்றுமதி பலமடங்கு அதிகரிக்கலாம் என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

இது பற்றி செய்தியாளர் கேட்டபோதே தென்னாபிரிக்க உபஜனாதிபதி முன்கண்டவாறு தெரிவித்தார்.

17 ஆண்டுகால ஆயுதத் தடை நீக்கத்தை தொடர்ந்து தென்னாபிரிக்கா இனி ஆயுதங்களை வாங்கவும் விற்கவும் முடியும் என்று தெரிவிக்கப்படுகிறது. [இ-எ]

தமிழர் மீதான ஆயுள் தண்டனை லண்டன் நீதிமன்றம் தள்ளுபடி

லண்டன், மே 28

மூன்று கொலைகளைச் செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்ட வழக்கில் இரு இலங்கைத் தமிழர்கள் மீது விதிக்கப்பட்டிருந்த ஆயுட் சிறைத் தண்டனையை லண்டன் மேன்முறையீட்டு நீதிமன்றம் ரத்துச் செய்துவிட்டது.

அதனைத் தொடர்ந்து சிறையில் வைக்கப்பட்டிருந்த பிரேம் சிவலிங்கமும் (30 வயது), சாம் சிவலிங்கமும் [37 வயது] விடுதலை செய்யப்பட்டனர்.

எட்டு ஆண்டுகளுக்கு முன்னர் கிழக்கு லண்டனில் மூன்று இலங்கைத் தமிழ் இளைஞர்கள் தங்கியிருந்த வீடு ஒன்றை குண்டு வீசி எரித்ததாகவும்—

அதன் மூலம் அம் மூன்று இளைஞர்களுக்கும் மரணத்தை விளைவித்ததாகவும் இவர்கள் இருவர் மீதும் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

தாம் காவலில் இருந்த போது துன்புறுத்தப்பட்டதாகவும்— தமது சட்டத்தரணிகளுக்கு முக்கிய தஸ்தாவேஜுகள் வழங்க மறுக்கப்பட்டதாகவும் முறையான விசாரணை நடத்தப்படவில்லை என்றும் கூறி இவர்கள் மேன்முறையீடு செய்திருந்தனர்.

இவர்களின் விண்ணப்பத்தை ஏற்றுக் கொண்ட மேன்முறையீட்டு நீதியரசர்கள், இவ்விளைஞர்கள் மீது விதிக்கப்பட்ட தண்டனை பொருத்தமற்றது என்று தீர்ப்பளித்தனர். (இ-எ-6)

முச்சந்தி முரளி



முந்தியும் இஸ்ரேலில் பயிற்சி பெற்று விட்டுத் தானே வந்து சண்டை போட்டனவை பாருங்கோ......!

வன்னிப் பகுதியில் நேற்று படையினருடன் மோதல்

2 போராளிகள் வீரச்சாவு

யாழ்ப்பாணம், மே 25

வன்னி மாவட்டம் நீலியாமோட்டை என்ற இடத்தில் நேற்று முன்தினம் மாலை 5. 30 மணிக்கு இராணுவத்தினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் திடீர் நேரடி மோதல் ஒன்று ஏற்பட்டது.

இந்த நேரடி மோதலின் போது போராளிகள் இருவரும், ஒரு பொதுமகனும் கொல்லப்பட்டனர்.

படையினர் தரப்பில் ஏற்பட்ட சேத விவரம் தெரியவரவில்லை.

லெப்டினன்ட் இரும்பொறை (சோமசுந்தரம் பிறைசூடி - வவுனியா) 2 ஆம் லெப்டினன்ட் சாஜகான் அல்லது தமிழ்வேந்தன் (வீரையா பரமகுரு) ஆகிய போராளிகளே வீரமரணமடைந்தனர். (இ-3)

கிளாலி – பூநகரி படகுச் சேவை

யாழ்ப்பாணம், மே 28

கிளாலி — பூநகரி படகுச் சேவை இன்று சனிக்கிழமை வழமையான நேரத்தில் நடைபெறும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல்துறையினர் அறிவித்துள்ளனர். (இ-3)

இலங்கைப் போராளிகள் சிறையில் உண்ணாவிரதம்

நால்வர் நிலைமை மோசம்

மணிலா, மே 28

வேலூர் கோட்டையில் காவலில் இருந்து வரும் இலங்கைப் போராளிகள் தங்களை தங்கள் குடும்பத்தவர்களுடன் சேர்த்து வைக்கக்கோரி கடந்த சில தினங்களாக உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர்.

இவர்களில் காந்தன், ஞானவேல், மகேந்திரராஜா, மகேந்திரன் ஆகிய நால்வரின் உடல் நிலையும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும்—

அவர்கள் வேலூர் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. [இ-3]

பிரேமதாஸா கொலை:

துலாஞ்சலி கோரிக்கையை ஜனாதிபதி நிராகரித்தார்

கொழும்பு, மே 28

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவின் படுகொலை பற்றி விசாரணை நடத்த விசேட குழு ஒன்றை நியமிக்க வேண்டும் என்று பிரேமதாஸாவின் மகள் துலாஞ்சலி விடுத்த வேண்டுகோளை ஜனாதிபதி விஜேதுங்கா உத்தியோகபூர்வமாக நிராகரித்து விட்டார்.

இத்தகவலை ஜனாதிபதியின் செயலாளர் கே.எச்.ஜே. விஜேதாஸா வெளியிட்டார்.

பிரேமதாஸாவைக் கொலை செய்தது விடுதலைப் புலிகள் தான் என்பது பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளதால், இன்னொரு விசேட குழுவை நியமித்து அக்கொலை பற்றி விசாரிக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை என்று திரு. விஜேதாஸா மேலும் தெரிவித்தார்.

திருமலையில் 4 தமிழர் சுட்டுக் கொலை!

யாழ்ப்பாணம், மே 28

திருகோணமலை மாவட்டம் கட்டைப்பறிச்சான், கணேசபுரத்திலும், கடற்கரைச் சேனையிலும் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் 4 தமிழ் மக்களை சுட்டுக் கொன்றுள்ளனர்.

கடந்த 8 ஆம் திகதி நண்பகல் 12 மணியளவில் கணேசபுரத்தில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் மூன்று தமிழ்மக்களை சுட்டுக் கொன்றனர்.

மணல்சேனை மூதூரைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான தங்கவேல் இருபா, அதே இடத்தைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தையான 26 வயதுடைய சுந்தர், ஈச்சிலம்பத்தையைச் சேர்ந்த 55 வயதுடைய செல்லத்துரை ஆகியோரே சுட்டுக் கொல்லப் பட்டவர்களாவர்.

கடந்த 24 ஆம் திகதி கடற்கரைச்சேனைப் பகுதியில் வைத்து இராணுவத்தினர் 40 வயதான கடற்கரைச் சேனையைச் சேர்ந்த நல்லதம்பி இன்பராஜா என்பவரை சுட்டுக் கொன்றனர். [இ-3]

ஜனாதிபதி தேர்தலில் எதிரணிக்கு ஆதரவு

ஸ்ரீமானி கட்சி அறிவிப்பு

கொழும்பு, மே 28

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் வேட்பாளரை ஆதரிப்பதென ஸ்ரீமானி அத்துலத்முதலியின் தலைமையிலான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி முடிவு செய்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

அண்மையில் ஸ்ரீமானி அத்துலத்முதலியுடன் மேல்மாகாண முதலமைச்சர் சந்திரிகா குமாரணதுங்கா பேச்சு நடத்தினார், அப்போதே முன்னணியின் இந்த முடிவு தெரிவிக்கப்பட்டது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளராக திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா போட்டியிடவிருக்கிறார் என்பது தெரிந்ததே. (இ-எ-3)

திருமலையில் குண்டு வீச்சு

யாழ்ப்பாணம், மே 28

திருகோணமலை மாவட்டத்தில் ஸ்ரீலங்கா வான்படை குண்டுவீச்சு விமானங்கள் நேற்று மக்கள் குடியிருப்பு பகுதிகளை நோக்கி பரவலாக தாக்குதல் நடத்தின.

கொட்டுக்குளம், கிந்துவாத்து ஆகிய பகுதிகளில் இத்தாக்குதல் நடத்தப்பட்டது.

இத்தாக்குதலின்போது ஏற்பட்ட சேதவிவரங்கள் தெரியவரவில்லை. (இ-3)

ஐ. தே. க. சார்பில் யார் போட்டியிட்டாலும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி எமக்கே!

சிறிமாவோ சொல்கிறார்

கொழும்பு, மே 28

ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் விஜேதுங்கா போட்டியிட்டாலும் சரி, காமினி திஸநாயக்கா போட்டியிட்டாலும் சரி வெற்றியீட்டப் போவது நாமே என்பது உறுதி செய்யப்பட்டு விட்டது.

திருமதி சிறிமாவோ [illegible] பண்டாரநாயக்கா [illegible] வாறு தெரிவித்தார்.

சுதந்திரக்கட்சியின் தேசிய செயற்குழுக் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட சுதந்திரக் [illegible] துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது.

ஐ. தே. க. அரசின் ஊழ் எனது குடியுரிமை பறிக்கப்பட்டது. [illegible] கட்சித்தலைமையகம் [illegible] வைத்து மூடப்பட்டது. இருந்தும் கட்சி பிழைத்துக் கொண்டது. எனது துணிச்சல், எனது வீரமிக்க தலைமைத்துவம் காரணமாகத்தான் கட்சி பிழைத்தது.

"காடைத்தனத்தை அரசு எனக்கு எதிராக கட்டவிழ்த்து விட்டது. என் வீட்டுக்கு அருகில் நின்று சொத்தி உபாலி என்னை அவதூறாகப் பேசினார் — என்றார் சிறிமாவோ (இ-எ)

நாளைய உதயனில்..

யாழ்ப்பாணம், மே 28

அரச சேவையில் உள்ள எழுதுநர் சேவைக்கும் அதனோடு இணைந்த சிறாப்பர், கணக்குப் பதியுநர், களஞ்சியக் காப்பாளர் சேவைகளுக்கும் —

சுகாதார எழுதுநர், அச்சக எழுதுநர், புகைவண்டி எழுதுநர், புகைவண்டி நேரம் பதியும் எழுதுநர் சேவைகளுக்கும் —

அரச கூட்டுத்தாபனங்களில் உள்ள எழுதுநர் சேவைக்கும் —

ஆட்சேர்ப்பதற்கான பொதுப் போட்டிப் பரீட்சை பற்றிய விவரங்களும் —

மாதிரி விண்ணப்ப படிவமும் — நாளைய உதயனில் வெளிவரும். (அ)

சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு

உரும்பிராய் சந்தியில் பிரதான பாதை அருகே அமைந்திருக்கும் 4 பரப்புக்காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: அ. கமலசேகரம் (நில அளவையாளர்), உரும்பிராய் சந்தி, உரும்பிராய். (7214)

கண்டிக்குளி தெற்கு, கந்தர்மடம், திருநெல்வேலி வீடு தளபாடங்களுடன் விற்பனைக்கு அல்லது வாடகைக்கு உண்டு. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். (31116)

அடைவைக்கக்கூடிய நல்ல இன கோழிமுட்டைகள், பன்டம், வான்கோழி முட்டைகள் எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, [illegible] சந்தையடி, நல்லூர் (30843)

45 நாட்கள் நிரம்பிய அல்சேஷன் ஆண், பெண் நாய்க்குட்டிகளும், பொமனேரியன் குட்டிகளும் விற்பனைக்கு உண்டு. நடராசா, புலேந்திரன் வீதி (ஆசைப்பிள்ளை மில் ஒழுங்கை), பலாலி றோட், கோண்டாவில் கிழக்கு. (31131)

ரெமிங்டன் தமிழ் தட்டச்சு இயந்திரம் மற்றும் ஆங்கில தட்டச்சு இயந்திரம் விற்பனைக்குண்டு. தொடர்பு: இ. மருதலிங்கம், இல. 8/1, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (31132)

உடன் தேவை

நல்ல நிலையிலுள்ள 15 KW மின்பிறப்பாக்கி (ஜெனரேற்றர்) ஒன்று உடனடியாக விலைக்குத் தேவைப்படுகிறது. தொடர்புகொள்ளவும்: சக்திப் பகுதி, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், காங்கேசன்துறை வீதி, தாவடிச் சந்தி, தாவடி, தமிழீழம். (சி-8336)

மணமகன் தேவை

யாழ் இந்து. 30 வயது, செவ்வாய்க்குற்றமுள்ள, திருவாதிரை நட்சத்திரம், 56 பாவம். வேலை செய்யும் பட்டதாரி மணமகளுக்கு அரசாங்க அல்லது தனியார் நிறுவனங்களில் வேலை செய்யும் மணமகன் தேவை. இல. 650, மே/பா உதயன், நாவலர் வீதி. (31099)

இறைச்சிக் கோழி

புறொயிர் 160/- இறைச்சிக் கோழி 150/- சனி, ஞாயிறு காலை 8-00 மணி முதல் 11-00 மணி வரை. சுத்தம் செய்து கொடுக்கப்படும். (28/5, 29/5 மட்டும்) 382, சென்ற் ஜுட் மோட்டேர்ஸ், (வெலிங்டன் சந்தி), மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (31115)

மணிக்கூடு திருத்துதல்

சகல மணிக்கூடுகளும் உத்தரவாதத்துடன் குறைந்த செலவில் திருத்திக் கொடுக்கப்படும். உதிரிப்பாகங்களுக்காக மணிக்கூடுகள் வாங்கப்படும். குடும்ப அட்டையுடன் வரவும். ஜெனிஸ் வாச் வேக்ஸ், 12, புகையிரத நிலைய வீதி, சுன்னாகம். சந்திக்கருகில். (7413)

பரீட்சை வழிகாட்டி

க. பொ. த. சாதாரணதர மாணவர்களுக்காக எர்த்தப் பரீட்சை வழிகாட்டி வினா-விடை நூல் வெளிவந்து விட்டது. தொகுப்பு: இராஜகிருஷ்ணர் இரகுநாதன் வெளியீடு: ஸ்ரீசுப்பிரமணிய புத்தகசாலை, யாழ்ப்பாணம். (7417)

3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மறைவு:
01 06-1991
திதி:
28-05-1994

திருமதி செல்லம்மா கனகரத்தினம்

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,

13/3, நாயன்மார் வீதி,
நல்லூர்:

(31122)

நாளை ஆரம்பம்

95 A/L
PHYSICS

திரு. ஜெயசீலன்
B. Sc (Hons)

புதிய பகுதிக்குரிய
புதிய பிரிவு
ஞாயிறு
29 05 1994
10-30 a.m.

மேலதிக விவரம்
நிறுவனத்தில்

SCIENCE COLLEGE
விஞ்ஞானக் கல்லூரி

பெருமாள் கோயில்
வீதி, யாழ்ப்பாணம்,
(சி-8342)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்:	மறைவு:
04 — 08 — 1902	08 — 06 — 1993

அமரர் செல்லம்மா முத்துக்குமாரு

திதி: 28 - 05 - 1994

ஆண்டொன்று சென்றதம்மா — நின்
ஆன்மா சாந்தியுற வேண்டுமருள்.
- குடும்பத்தினர்

தொல்புரம்,
சுழிபுரம்.

(சி/8231)

விண்ணக வாழ்வின்
2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

செல்வி மறினா சாந்தினி சவுந்தராஜ்

(வல்வெட்டித்துறை புனித செபஸ்தியார் பாலர் பாடசாலை ஆசிரியை)

மலர்வு: 21 — 11 — 1963

செல்வன் சாள்ஸ் றொசான் சவுந்தராஜ்

(யாழ். தொழில்நுட்பக் கல்லூரி மாணவன்)

மலர்வு: 25 — 05 — 1969

அழிப்பு. 28 — 05 — 1992

"சீவியத்தில் இவர்களை நேசித்தோம் மரணத்திலும் இவர்களை மறவோம்"

இவர்களின் ஆத்மசாந்திக்காக இன்று (28-05-1994) சனிக்கிழமை காலை 7 மணிக்கு வல்வெட்டித்துறை புனித செபஸ்தியார் தேவாலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் இரங்கல் திருப்பலியில் பங்குபற்றி இவர்களின் ஆத்ம சாந்திக்காக செபிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்;

என்றும் உங்கள் நினைவில் வாழும்;
பெற்றோர், சகோதரர்கள்;

திருவில் ஒழுங்கை, வல்வெட்டித்துறை.

(31114)

- ❋ உங்கள் மின் பிறப்பாக்கி பழுதடைந்து உள்ளதா?
- ❋ புதிதாக ஒரு மின்பிறப்பாக்கியை அமைத்துக்கொள்ள விரும்புகிறீர்களா?
- ❋ மின் விநியோக வேலைகள் செய்ய வேண்டியுள்ளதா?

கவலை வேண்டாம்

- ❋ நீண்டகால உத்தரவாதத்துடன் நல்ல முறையில் மின் பிறப்பாக்கிகளைத் திருத்திக் கொள்ளவும்,
- ★ புதிய மின் பிறப்பாக்கிகளை அமைத்துக் கொள்ளவும்,
- ❋ மின்விநியோக வேலைகளை திருப்திகரமாகவும், திறமையாகவும் செய்து கொள்ளவும்,

நாடுங்கள்:

சக்திப் பகுதி
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்
காங்கேசன்துறை வீதி,
தாவடிச்சந்தி,
தாவடி,
தமிழீழம்.

'உங்கள் தேவைக்கு...எங்கள் சேவை'

(சி 8337)

---

3 ஆம் மாத நினைவஞ்சலி

தோற்றம்:	மறைவு:
11 — 02 — 1971	26 — 02 — 1994

அமரர் தெய்வேந்திரம் ரவீந்திரன்

(ரவி)

(யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவன்)

"ஆழமான இனொலி உனது நண்பன்
ஆழமினை இறப்பைக்குளம் உனது எதிரி
அறாத்துயர் கொண்ட குடும்பத்தினருக்கு பகரின்
ஆழ்ந்த அனுதாபங்கள்
ஆறுதல் தருமோ நண்பனே"?

- நண்பர்கள்.

அத்தியடி,
யாழ்ப்பாணம்.

(31130)

ஓராண்டு நினைவஞ்சலி

திருமதி நகுலேஸ்வரி நகுலராசா

(அம்பன், குடத்தனை)

தோற்றம்:	மறைவு:
01 — 01 — 1954	07 — 06 — 1993

திதி: 28 — 05 — 1994

ஆண்டு ஒன்று ஓடி மறைந்ததம்மா. அன்புத் தெய்வமே உன் அன்பு முகங்கண்டு மாண்டதுயர் தாளாது ஆருயிர்த் துணைவன், அன்பு மகன், பாசமூட்டி வளர்த்த பெறாமகன், சகோதரர், சகோதரிகள், பெறாமக்கள், அம்மம்மா, மைத்துனர்மார், மைத்துனிகள், மாமன்மார், மாமிமார்கள் விருந்தோம்பி மகிழ்வித்த உற்றார், உறவினர்கள் கலங்கி நிற்கின்றோம். நீண்டதொரு பயணத்தை நீர்தேடிச் சென்றதென்ன. விண்ணவர் மதியில் விண்மீனாய் ஒளி வீச பிரார்த்திக்கின்றோம்.

[illegible] பிரிவால் துயருறும்,
- குடும்பத்தினர்.

அம்பன், குடத்தனை.

(31100)

சுன்னாகம் வரியப்புலம்

ஸ்ரீ மகாமாரி அம்பாள் தேவஸ்தான
சங்காபிஷேக விஞ்ஞாபனம்

இன்று சனிக்கிழமை 28-5-94 பகல் 1009 சங்காபிஷேகமும், நவசக்தி அருட்சனையும், தொடர்ந்து அன்னதானமும் நடைபெறும்.

இரவு நிகழ்ச்சிகள்;

விசேட பூசையும் அம்பிகை திருவீதி வலம் வருதல்

❋ மங்கள இசை தேவஸ்தான வித்துவான்
பாலகிருஷ்ணன் குழுவினர்

சொற்பொழிவு:

திரு. ஆறு. திருமுருகன்
[ஆசிரியர் B. A.]

விசேட மேளக் கச்சேரி;

❋ நாதஸ்வர மேதை N. R. கோவிந்தசாமியின் புதல்வர்கள்:

கோ. இரத்தினகுமார் — சு. இராமதாஸ்
கோ. வாகீஸ்வரன் — மு. ஜெயானந்தன்

❋ நாதஸ்வர இசைமணி அளவையூர்

இ. கேதீஸ்வரன் — சி. ஜெயராமன்
மு. ஆனந்தன் — ச. சொர்ணலிங்கம்

பிரபல சாந்தன் இசைக் குழுவினர்
வழங்கும்

"இன்னிசை விருந்து"

அம்பிகை அடியார்களும்,
நிர்வாக சபையினரும்.

விளம்பர அன்பளிப்பு:

மேகலா பல்பொருள் வாணிபம்
இல 9, காங்கேசன்துறை வீதி,
சுன்னாகம்.

விழா சிறப்புற வாழ்த்துகின்றோம்

(சி-2093)

படச்சுருள் விற்பனை

கறுப்பு வெள்ளை (135/36)
வர்ணபடச்சுருள் (120/12, 110/24)

மொத்தமாகவும் சில்லறையாகவும் விசேட கழிவு விலையில் பெற்றுக் கொள்ளுங்கள்.

கலக்சி
புகைப்பட சேவை
337/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-8346)

THE JAFFNA EDUCATION CENTRE
யாழ்ப்பாணக் கல்வி நிலையம்

[சாந்தி சினிமா முன்பாக மேல்மாடியில்]

A/L வர்த்தகம் - 96

கணக்கியல்: திரு. A. அகஸ்ரீன்
B. Com. [Hons] Dip. in Edu.

ஆரம்பம்; **28 - 05 - 1994**
நேரம்: 2 மணி — 3 மணி

-நிர்வாகி

(7420)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்:	மறைவு:
10 — 07 — 1912	08 — 06 — 1993

அமரர்

தம்பர் காசிப்பிள்ளை கந்தசாமி

(சாமியார்)

(காரைநகர் சுபூமி வளுப்போட முன்னாள் T. K. K. சுருட்டுக் கம்பனி உரிமையாளர்)

திதி: 28 — 05 — 1994

ஆண்டு ஸ்ரீமுகத்தில் ஆனதொரு வைகாசி பூண்ட அமரபட்ச புண்ணிய நாள் சதுர்த்தியில் ஈண்டிருந்து கைலைவாழ் புனிதன் பொற்பாதம் காணப் பற்றே சென்றன் கனிந்து.

அப்பா ஆண்டு ஒன்று சென்றாலும் உங்கள் நினைவும் எங்கள் அம்மாவின் நினைவும் எங்கள் நெஞ்சங்களில் இனி என்றும் மாறாது உங்கள் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல திக்கரை முருகப் பெருமானை பிரார்த்திக்கின்றோம். எதிர்வரும் 07-06-94 அன்று ஆத்மா சாந்திப்பிரார்த்தனை கிரியைகள் நடைபெறும்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

வட்டு தெற்கு,
உதயன் வீதி, வட்டுக்கோட்டை;

(7419)

உதயன்
192/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

பால் ஊட்டி வளர்த்த பாம்பு!

யாழ்ப்பாணம் செயலகத்தில் நேற்று இடம்பெறவிருந்த பட்டதாரி பயிலுநர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான நேர்முகப் பரீட்சை நடைபெறவில்லை. அதனை அடுத்த வாரத்திற்கு ஒத்திவைக்க வேண்டியதாயிற்று.

தமிழ்ப் பகுதிகளில், அதிலும் மிகக் குறிப்பாக இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளில், தமிழ் மக்களுக்குக் கிடைக்க வேண்டிய வசதிகளையும் நன்மைகளையும் தடுப்பதில் சிங்கள அரசியல்வாதிகள் பெரிதும் அக்கறை உள்ளவர்கள். மிகப் பல சந்தர்ப்பங்களில் கடவுள் வரம் கொடுத்தாலும் பூசாரி வரம் தராத நிலையில், தமிழர்களுக்குக் கிடைக்கக் கூடிய நலன்களையும் வசதிகளையும் முட்டுக் கொடுத்து அரசாங்க உயர் அதிகாரிகள் தடுத்து விடுகிறார்கள்!

இந்தத் தடைபோடும் பேர்வழிகளில் இப்போது அரச படைகளைச் சேர்ந்த அதிகாரிகளும் வெளிப்படையாகச் சேர்ந்து கொள்கிறார்கள். நேற்றைய நேர்முகப் பரீட்சை ஒத்திப் போடப்படுவதற்கு வவுனியாவில் உள்ள இராணுவ அதிகாரிகள் போட்ட தடையே காரணமாகும்.

கொழும்பில் உள்ள அதிகாரிகளின் பூரண ஒத்துழைப்புடன், அவர்களின் அனுமதியுடன், யாழ். செயலக அதிகாரி ஒருவர் நேர்முகப் பரீட்சையை நடத்துவதற்குத் தேவையான ஆவணங்களை எடுத்து வந்தார். ஆனால் தாண்டிக்குளத்தில் உள்ள இராணுவ அதிகாரிகள் அந்த ஆவணங்களை யாழ்ப்பாணம் எடுத்துவர அனுமதிக்கவில்லை.

அரச நேர்முகப் பரீட்சைக்குரிய ஆவணங்களையும் தடைசெய்யப்பட்ட பொருளாகவே தாண்டிக்குள அதிகாரிகள் கருதிவிட்டார்களா? அல்லது —

அரசியல்வாதிகள், நிர்வாகத்துறை உயர் அதிகாரிகளையும்விடத் தாம் மேலாண்மை உள்ளவர்கள் என்பதைக் காட்டுவதற்காக ஆவணங்களைத் தடுத்தார்களா?

தேர்தலில் வாக்குத் தேடும் நோக்கத்தோடு ஜனாதிபதி நாளாந்தம் ''மக்கள் நலன் கருதிய'' தமது திட்டங்கள், நடவடிக்கைகள் குறித்து அறிவித்து வருகிறார். இன்னும் ஆறு மாதங்களே இருப்பதால், அவற்றை உடனுக்குடன், சூட்டோடு சூடாக நடைமுறைப்படுத்துவதில் நிர்வாக அதிகாரிகள் பம்பரமாகச் சுழன்று பணியாற்றுகிறார்கள்.

ஜனாதிபதியின் தேர்தல் நலத் திட்டங்களில் ஒன்றே பட்டதாரிகளுக்கு உடன் வேலை வழங்குதல். நெல்லுக்கு இறைத்த நீர் புல்லுக்கும் ஆங்கே பொசிவதுபோல அவரின் தேர்தல் நலன் கருதிய திட்டங்களால் தமிழ் மக்களும் சொற்ப அளவில் பயனடைய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

அதனைத் தடுப்பதே இராணுவ அதிகாரிகளின் நோக்கமாக இருந்திருக்கிறது.

தமிழர்களைப் பொறுத்தவரையில் இராணுவம் எந்தக் கொடுமையைச் செய்தாலும், அநியாயமாக நடந்து கொண்டாலும் அரசாங்கம் ஒரு போதும் தட்டிக் கேட்பதில்லை. அந்தப் பழக்கத்திலேயே நேர்முகப் பரீட்சைக்குரிய ஆவணங்கள் தாண்டிக்குளத்தைத் தாண்டாமல் இருக்கக் கண்காணித்திருக்கிறார்கள் படையினர்!

தந்தையின் தோளுக்கு மேல் தனயன் உயர்ந்து விட்டால், அவர் மகனைத் தட்டிக் கேட்கத் தயங்குவதுண்டு. அது போலவே தமது உத்தரவின் பேரில் நடக்கும் பணிகளையும், சேவைகளையும் தமிழர்களை அனுபவிக்க விடாமல் தடுக்கும் இராணுவத்தினரை விஜேதுங்காவால் தட்டிக் கேட்க முடியாது!

எப்படியோ, தாண்டிக்குள இராணுவத்தினரின் செயலை ஜனாதிபதிக்கு விடப்பட்ட ஒரு சவாலாகவே கருத வேண்டும். பாலை ஊட்டிப் பாம்பை வளர்த்தாலும் அது கடிக்கத்தான் செய்யும் என்பதை இப்போதாவது அரசியல் தலைவர்கள் உணர்வார்களா?

காமினி - தொண்டா ஹெலியில் நுவரெலியாவுக்கு பயணம்!

யாகபூசையில் இருவரும் ஒன்றாகக் கலந்து கொண்டனர்!!

கொழும்பு, மே 28

நுவரெலியா லங்காதீஸ்வரர் ஆலயத்தில் கடந்த செவ்வாயன்று நடைபெற்ற விசேட யாகபூசை வழிபாட்டில் அமைச்சர் தொண்டமானும், காமினி திஸநாயக்காவும் ஒன்றாகக் கலந்து கொண்டனர்.

விசேட யாகபூசையில் கலந்து கொள்வதற்காக அமைச்சர் தொண்டமானும், காமினி திஸநாயக்காவும் ஒன்றாக கொழும்பில் இருந்து 'ஹெலி' மூலம் நுவரெலியா மாநகரசபை மைதானத்தில் சென்று இறங்கினர்.

யாகபூசையின் பின்னர் அங்கு நடந்த கூட்டத்தில் இருவரும் உரையாற்றினர்

நாட்டில் இன சௌஜன்யத்தையும், சமாதானத்தையும் மீண்டும் ஏற்படுத்த வேண்டும்; நாட்டில் சமாதானம் ஏற்படவே காமினியும் நானும் ஒன்றாக நுவரெலியாவுக்கு வந்துள்ளோம்.— இவ்வாறு அமைச்சர் தொண்டமான் அங்கு கூறினார்.

நாட்டில் உள்ள அனைத்துப் பிரச்சினைகளுக்கும் அமைச்சர் தொண்டமானுடன் இணைந்து பரிகாரம் தேட நான் தயாராக இருக்கிறேன் என்றார் காமினி திஸநாயக்கா.

அமைச்சர் தொண்டமான் அங்கு பேசுகையில் கூறியதாவது:

புத்தர் இந்தியாவில் பிறந்தவர், அவர் இன்று உலக நாடுகளில் மதித்து கௌரவிக்கப்படுகிறார். எமது மூதாதையரும் இந்தியாவில் பிறந்தவர்கள்தான். புத்தரை மதித்து கௌரவிப்பதுபோல் எமது மூதாதையரையும் மதித்து கௌரவிக்க வேண்டும். நமது பூர்வீகம் இந்தியாவாக இருந்தாலும் எமது உரிமைகளைக் கேட்பதில் நாம் பயப்படக்கூடாது.

நானும் காமினி திஸநாயக்காவும் கொத்மலை தொகுதியில் பிறந்து வளர்ந்தவர்கள். அவரது தாயாரை நான் 10 வயதாக இருந்தபோதே எனக்குத் தெரியும் எங்கள் உறவு பழைமை வாய்ந்தது. இந்த நாட்டில் சமாதானம் ஏற்படுத்தவே நாம் இருவரும் ஒன்றாக இங்கு வந்துள்ளோம் — என்றார்.

திரு. காமினி திஸநாயக்கா அங்கு கூறியதாவது:

இந்தியாவில் இருந்தே அனைவரும் வந்தனர்

இந்த நாட்டில் வேடர்களைத் தவிர அனைவரும் இந்தியாவில் இருந்தே வந்தனர்.

கடந்த 15 வருடங்களாக இந்நாட்டில் அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது. அதேபோல் பிரச்சினைகளும் ஏற்பட்டுள்ளன. தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களுக்கு உயிர்ச்சேதங்களும் ஏற்பட்டுள்ளன. நாடு முழுவதும் தீப்பற்றி எரிந்துள்ளது. நுவரெலியாவும் தீப்பற்றி எரிந்துள்ளது. இவ்வாறான பிரச்சினைகள் ஏற்பட்ட போதும் நானும் தொண்டமானும் ஒற்றுமையாகவே இருந்துள்ளோம்.

இன்று நாட்டில் உள்ள சிரேஷ்ட அரசியல்வாதிகள் தொண்டமானும், ஜே. ஆர். ஜெயவர்த்தனாவுமே ஆவர். இன்று ஜே. ஆர். ஜெயவர்த்தனாவுடன் நேரடியாகச் சென்று பேசக்கூடிய அரசியல்வாதி ஒருவர் உண்டென்றால் அது தொண்டமான்தான் — என்றார். (ஒ-5)

சுகநல கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மே 28

புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலய பெற்றோர்களுக்கான சுகநலக் கருத்தரங்கு இன்று சனி பிற்பகல் 3 மணி முதல் 5 மணி வரை சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாநகர ஆணையாளர் திரு. வே. பொ. பாலசிங்கம் அங்கு சிறப்புரை ஆற்றவுள்ளார்.

மாணவர் சுகநலம் என்ற தலைப்பில் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ. தெய்வேந்திரமும்,—

''பற்சுகாதாரம்'' என்ற தலைப்பில் பல்வைத்திய நிபுணர் திருமதி சண்முகரத்தினமும்.—

மாணவர் எதிர்கால சமூக உருவாக்கம் என்ற தலைப்பில் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை சிரேஷ்ட விரிவுரையாளர் காரை. செ. சுந்தரம்பிள்ளையும் உரையாற்றுவர். (ஒ-5)

நாட்டிலுள்ள அனைத்துப் பிரச்சினைகளுக்கும்

தொண்டாவுடன் இணைந்து பரிகாரம் காணத் தயார்!

காமினி அறிவிப்பு

கொழும்பு, மே 28

இன்று நாட்டில் பல பிரச்சினைகள் உள்ளன. அவை அனைத்துக்கும் தீர்வுகாண வேண்டும். நாட்டில் உள்ள அனைத்துப் பிரச்சினைகளுக்கும் அமைச்சர் தொண்டமானுடன் இணைந்து பரிகாரம் காண நான் தயாராக இருக்கின்றேன்.

ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான காமினி திஸ்ஸநாயக்கா இப்படிக் கூறியுள்ளார்.

நுவரெலியா ''கிராண்ட் ஹோட்டலில் கடந்த செவ்வாய் பிற்பகல் நடந்த கூட்டம் ஒன்றில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அமைச்சர் தொண்டமானும் அந்தக் கூட்டத்தில் பிரசன்னமாயிருந்தார்.

திரு. காமினி திஸநாயக்கா அங்கு மேலும் தெரிவித்ததாவது;

அமைச்சர் தொண்டமான் இலங்கையில் மாத்திரமல்ல, உலகத்தவர் யாவரும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு தலைவராவார். அவர் எனது வளர்ச்சியில் மிகுந்த அக்கறை கொண்டவர். எனவேதான் என்னை மத்திய மாகாண சபைக்கு முதலமைச்சராக்க முயற்சி எடுத்தார்.

அமைச்சர் தொண்டமான் எடுத்த அந்த முடிவு மறைந்த தலைவர் டி. எஸ். சேனநாயக்கா போன்றோர் எடுத்த முடிவுகளைப் போன்றே அமைந்துள்ளது — என்றார்.

இரண்டொரு தினங்களில் தமக்கு முக்கிய பதவிகள் கிடைக்கும் என்றும் —

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் இன்றைய ஜனாதிபதியே ஐ. தே. கவின் வேட்பாளர் எனவும் — காமினி திஸநாயக்கா அந்தக் கூட்டத்தில் ஆற்றிய உரையில் குறிப்பிட்டிருந்தார். (ஒ-5)

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து

10 லட்சம் பௌத்த மக்கள் கையெழுத்திட்டு அரசுக்கு மனு

கொழும்பு, மே 28

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து பௌத்தர்கள் சுமார் 10 லட்சம் பேர் கைச்சாத்திட்ட மனு ஒன்றை அரசாங்கத்திடம் கையளிக்கும் நோக்கில் இயக்கம் ஒன்று கடந்த செவ்வாயன்று கண்டி தலதா மாளிகையில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

பௌத்த நிக்காயாக்களின் தலைவர்கள், முக்கிய பௌத்த மதத் தலைவர்கள் தலைமையில் அந்த இயக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

★ அரசமைப்புச் சட்டத்தில் அளிக்கப்பட்டுள்ள உறுதிக்கமைய பௌத்த சாசனத்துக்கு முக்கியத்துவம் அளியுங்கள்.

★ இந்த நாட்டில் உள்ள பௌத்த சாசனத்தை ஏனைய மதங்களுடன் ஒப்பிடுவதைத் தவிர்க்க வேண்டும்.

★ பௌத்த மதத்தை அரசாங்கம் பேணிக்காக்க வேண்டும்.

★ பௌத்தர்களை வேறு மதங்களில் நாட்டம் கொள்ளச் செய்வதை தடுப்பதோடு மிசனரி நடவடிக்கைகளைத் தடைசெய்ய வேண்டும்.

★ தனியான பௌத்த கிராமங்களில் வேறு மத ஆலயங்களை அமைப்பது தவிர்க்கப்பட வேண்டும்.

★ சர்வமதக் கோட்பாடு என்ற ஏமாற்று வேலை உடன் தடை செய்யப்பட வேண்டும்.

— இவ்வாறான பல கோரிக்கைகள் உடனடியாக ஏற்று அமுல் செய்யப்பட வேண்டும் என அந்த மனுவில் கேட்கப்பட்டுள்ளது.

தலதா மாளிகையில் வைத்து மகாநிக்காயாக்களின் மல்வத்தை பீடாதிபதிகளும், தலதாமாளிகை தியவதன நிலமேயும் கடந்த செவ்வாயன்று அந்த மனுவில் கைச்சாத்திட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கொழும்பிலிருந்து சைக்கிள்கள்

யாழ்ப்பாணம், மே 28

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளையில் பணிபுரியும் ஊழியர்களுக்கு கொழும்பில் இருந்து கப்பல் மூலமாக 50 சைக்கிள்கள் எடுத்துவரப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கைகளை இலங்கை செஞ்சிலுவை சங்க யாழ். கிளை மேற்கொண்டுள்ளது (க-17)

தலைமன்னாரில் 9 இளைஞர் கைது!

தலைமன்னார் கிராமம் ஒன்றில் இருந்து இரு மாணவர்கள் உட்பட 9 இளைஞர்கள் கடந்த திங்களன்று கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

றொபேட் கூஞ்ஞ, கிறிஸ்து ராஜன்குருஸ் எமில்லப்பேர்ட் ஜெமிக்லேயம், அகஸ்டின்சாயம் லேயம்லீமா, சவுல்கூஞ்ஞ ஜெனினோல்ட், கரேஸ், எஸ். ஜூட் ஆகிய ஒன்பது பேருமே கைது செய்யப்பட்டவர்களாவர்.

கைதான தமது பிள்ளைகளை உடன் விடுவிக்க உதவுமாறு அவர்களின் பெற்றோர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-5)

தொண்டருக்கான மாதாந்த பயிற்சி

யாழ்ப்பாணம், மே 28

''யுனிசெவ்'' உதவியுடன் மாநகராட்சி மன்ற சுகாதாரத் தொண்டர்களுக்கான மாதாந்தம் நடத்தப்பட்டுவரும் பயிற்சி வகுப்புகள் வரிசையில் இம்மாதத்துக்குரிய பயிற்சி வகுப்பு இன்று 28 ஆம் திகதி காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4 00 மணிவரை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெறவுள்ளது.

'நகர்ப்புற வறியவர் மத்தியில் பணிபுரிதல்' என்பதைக் கருப்பொருளாகக் கொண்டு ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இப்பயிற்சி வகுப்பில் பின்வரும் விரிவுரைகள் இடம்பெறவுள்ளன.

1. மாநகராட்சி மன்றப் பிரதேசத்திலுள்ள அபிவிருத்தி குன்றிய பகுதிகளில் சுகாதார, போஷாக்கு நிலை. —வைத்திய கலாநிதி. இ. தெய்வேந்திரன்
2. வறிய குடும்ப சிறுவர்களின் கல்வி மேம்பாட்டில் சுகாதாரத் தொண்டர்கள், குடும்ப நல உதவியாளர்களின் பங்கு — கலாநிதி. ஜெயராசா
3. வறிய சிறுவர்களிடையே காணப்படும் உளவியற் பிரச்சினைகள் — கலாநிதி ஜெயராசா.

(4ஆம் பக்கம் பார்க்க)

புலிகளின் குரல் வானொலியில்

28 - 05 - 1994

சனி இரவு

★ 8-01 — அறிவியற் களம்
★ 8-10 — தாயகப் பாடல்கள்
★ 8-25 — நேயர் கடிதங்கள்
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — சித்திரம்-''புலி வீரம் இனிவெல்லும்''

29 - 05 - 1994

ஞாயிறு காலை

★ 7-02 — மாவீர வணக்கம்
★ 7-15 — களத்தில் மலர்ந்தவை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-4[illegible] — [illegible] தவை நிகழ்ச்சியின் [illegible]

சிக்காக்கோ பிரசங்கவிழா: இன்று 2ஆம் நாள் நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், மே 28

திருநெல்வேலி இராமகிருஷ்ணாலயம் நடத்தும் சுவாமி விவேகானந்தரின் சிக்காக்கோ பிரசங்க நூற்றாண்டு விழாவின் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் இன்று சனிக்கிழமைமாலை 4மணிக்கு நல்லூர் இளங்கலைஞர் மன்றக் கலா மண்டபத்தில் நடைபெறும்.

நாதஸ்வர மேதை என். கே. பத்மநாதனின் மங்கள இசையுடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.

பிரதம விருந்தினராக யாழ் மாநகர ஆணையாளர் திரு. வே. பொ. பாலசிங்கம் கலந்து கொள்வார் யாழ். வணிகர் கழகத் தலைவர் திரு. வே. சிற்சபேசன் சிறப்புரை நிகழ்த்துவார்.

யாழ். பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் திரு. எம். வேதநாதன் ''சுவாமி விவேகானந்தரின் சமூக சிந்தனைகள்'' என்ற தலைப்பில் ஆய்வுரை நிகழ்த்துவார்.

'வீரத்துறவி விவேகானந்தர்' என்ற தலைப்பில் வில்லிசையும் 'மானுடத்தை நேசித்த ஞானி விவேகானந்தர்' என்ற தலைப்பில் கவியரங்கமும் இடம்பெறும்.

திருநெல்வேலி நுண்கலைக் கோயில் மாணவிகளின் நடன நிகழ்ச்சிகளும் நாடகமும் இறுதி நிகழ்ச்சிகளாக இடம்பெறும்.

ஆய்வுக் கட்டுரைப் போட்டிகளில் வென்றவர்களுக்கான பரிசில்களும், சிக்காக்கோ நூற்றாண்டு விழா கலை நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டவர்களுக்கு சான்றிதழ்களும் இன்றைய நிகழ்ச்சிகளின் போது வழங்கப்படும். (இ-எ)

இயன் சிகிச்சைப் பிரிவு நகரில் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே. 28

கொழும்பு நட்புறவுச் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளை சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் உதவியுடன் இயன் மருத்துவ சிகிச்சைப்பிரிவு (Physio-therapy unit) ஒன்றை யாழ். செயற்கைக் கால் தொழிற்சாலை நிறுவனத்தில் இன்று முற்பகல் 11-30 மணியளவில் ஆரம்பிக்கின்றது.

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் யாழ். மாவட்ட இணைப்பாளர் திரு: ஜெனாதன் குட்ஹாண்ட் மருத்துவப் பிரிவை அங்குரார்ப்பணஞ் செய்து வைப்பார்.

இம் மருத்துவப்பிரிவு வாரம் தோறும் திங்கள் முதல் வெள்ளிக்கிழமை வரை காலை 8-30 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை இயங்கும் என்றும் சிகிச்சைகள் யாவும் இலவசமாக வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்படுகிறது. (ஒ-எ-111)

கலாநிதிப் பட்டத்திற்கு கற்பதற்காக

அரசு உத்தியோகத்தர் 3வருட லீவு பெறலாம்!

கொழும்பு, மே 28

அரசாங்க உத்தியோகத்தர்கள் முதுமாணிப்பட்டம் அல்லது அதையொத்த ஒருபட்டப்படிப்பு நெறியினைப் பயின்ற பின்னர் கலாநிதிப் பட்டம் ஒன்றுக்குக் கற்பதற்காக மூன்று ஆண்டுகள் லீவு பெற முடியும்.

இது தொடர்பான பணிப்புரை சுற்றறிக்கை மூலம் சகல அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும், திணைக்களத் தலைவர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (ஒ-5)

நாய்களுக்கு விசர் நோய் தடுப்பூசி

யாழ்ப்பாணம், மே 28

யாழ் மாநகராட்சி மன்றத்திற்குட்பட்ட பகுதியில் உள்ள நாய்களுக்கு விசர் நோய் தடுப்பூசி ஏற்றும் வேலையை யாழ் மாநகர சுகாதார பகுதி ஆரம்பிக்கவுள்ளது.

அடுத்த வாரமளவில் இத்தடுப்பூசி பொது இடங்களில் வைத்து நாய்களுக்கு ஏற்றப்படும் என்று அறிவிக்கப்படுகிறது. (க-17)

மெக்காவில் உயிரிழந்தோர் 1,000க்கும் அதிகம்

இஸ்லாமியர்களின் புனித நகரான மெக்காவில் கடந்த திங்களன்று நடந்த வருடாந்த ஹஜ் வழிபாட்டின் போது ஏற்பட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்த யாத்திரிகர்களின் எண்ணிக்கை ஆயிரத்துக்கும் அதிகமாக இருக்கலாம் என்று செய்தி ஏஜென்சிகள் அறிவித்தன.

இச்சம்பவத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை சுமார் இருநூற்றி ஐம்பது என முன்னர் அறிவிக்கப்பட்டது தெரிந்ததே. (உ)

புலிகளின் நடமாட்டம்பற்றி தகவல் தந்தால் சன்மானம்!

புதுவை முதலமைச்சர் அறிவிப்பு

சென்னை, மே. 28

பாண்டிச்சேரி காரைக்கால் பகுதிகளில் விடுதலைப் புலிகள் நடமாட்டம் பற்றிய துப்புக் கொடுத்தால் பரிசு வழங்கப்படும். அரசியல் கட்சிப் பிரமுகர்கள், பொதுநலவாதிகள் யாராக இருந்தாலும் தகவல் கொடுக்கலாம். அவர்கள் பெயர் ரகசியமாக வைக்கப்படும்.

இவ்வாறு பாண்டிச்சேரி (புதுவை) முதலமைச்சர் வைத்தியலிங்கம் அறிவித்துள்ளார்.

பாண்டிச்சேரி பகுதியில் விடுதலைப் புலிகள் நடமாட்டம் இருக்கிறது என்று அண்டை மாநிலங்களில் இருப்பவர்கள் சொல்கிறார்கள் நம்முடைய எம். பி. நாராயணசாமியும் சொல்லியுள்ளார்.

ஆனால் பாண்டிச்சேரி மாநிலத்தில் விடுதலைப் புலிகள் நடமாட்டம் இல்லை— என்றும் அவர் கூறினார்;

சுதந்திரக் கட்சியுடன் லலித் அணி தேர்தல் கூட்டு

கொழும்பு, மே 28

எதிர்வரும் தேர்தல்களின் போது தேர்தல் உடன்பாடு காணும் பேச்சுவார்த்தைகளை சுதந்திரக் கட்சியும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் லலித் பிரிவும் அடுத்த சில வாரங்களில் மேற்கொள்ளவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

லலித் அணியுடன் பேச்சுகள் நடத்துவதற்கு சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு தீர்மானித்துள்ளதாக அக்கட்சியின் பொதுச் செயலாளர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்திருக்கிறார்.

லலித் அணியினர் தெரிவு செய்யும் வேட்பாளர்களுக்கு பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் வேட்பாளர் பட்டியலில் இடமளிக்கும்படி லலித் அணி திருமதி சிறிமாவோவைக் கடித மூலம் கோரியுள்ளது என்றும் திரு. சேனநாயக்கா குறிப்பிட்டார். (இ-எ-6)

ஆசிரியருக்கு விசேட பதவிகள்: கல்விபகுதியின்பரிசீலனையில்

அகில இலங்கை வர்த்தக கல்விச் சங்கம் பல்வேறு தரங்களிலுள்ள ஆசிரியர்களுக்கு விசேட பதவிகளை வழங்க வேண்டும் என்று கோரித் தயாரித்துள்ள விவரமான திட்டம் தற்போது கல்வி அமைச்சின் உயர் அதிகாரிகளின் பரிசீலனையில் உள்ளது.

''ஆசிரியர்களுக்கு விசேட பதவிகள்'' என்ற தலைப்பில் மேற்படி சங்கம் தயாரித்த திட்டத்தின் பிரதியை, சங்கச் செயலாளர் திரு. எஸ். எம். புவனேந்திரன், கல்வி உயர் கல்வி அமைச்சின் இணைப்பு (அம்பலாங்கொட) நாடாளுமன்ற உறுப்பினர் திரு. புஞ்சி குருகுலரத்னவுக்கு அனுப்பியிருந்தார்.

திரு. குருகுலரத்ன திட்டத்தின் பிரதியை கல்வி அமைச்சின் செயலாளர் திரு. வெரகொட, கல்விச் சேவை கமிஷனின் செயலாளர் திரு. ஏ. எஸ். வீரரத்ன, கல்விச் சேவைக் குழுவின் தலைவர் ஜோர்ஜ் மெண்டிஸ் ஆகியோருக்கும், கல்வி அமைச்சர் திரு. வொக்குபண்டார விடமும் தமது சிபார்சுகளுடன் சமர்ப்பித்திருந்தார்.

அதனைத் தொடர்ந்து ஆசிரியர்களுக்கு விசேட பதவிகள் வழங்கக் கோரும் திட்டம் கல்வி அமைச்சின் உயர் அதிகாரிகளின் வரவேற்பைப் பெற்றுள்ளதாக அறிய வருகின்றது.

இதற்கிடையில், ஸ்ரீலங்கா நிர்வாக சேவை, ஸ்ரீலங்கா கல்வி நிர்வாக சேவை ஆகியவற்றைப் போல நிர்வாக நிலைமைகள், பதவி உயர்வு வாய்ப்புகளைக் கொண்ட ஸ்ரீலங்கா ஆசிரியர் சேவை ஒன்றை நிறுவும் நோக்கத்துடன் கல்வி, கலாசார அமைச்சர் டபிள்யூ. எம். வொக்குபண்டார இது பற்றிய நகல் பிரேரணைகளை ஆசிரியர் சங்கங்களின் பரிசீலனைக்கு முன் வைத்துள்ளார்.

நகல் பிரேரணை, அமைச்சரவையின் அங்கீகாரத்தின் பேரில் தேசிய கல்விக் கமிஷன், ஆசிரியர் சங்கங்கள் ஆகியன சமர்ப்பித்த பிரேரணைகளின் அடிப்படையில் நிர்வாக கமிட்டி ஒன்றினால் தயாரிக்கப்பட்டது (க)

பெண் துணை வேண்டிய ஆணே பொன்னும் பொருளும் ஏன் கேட்கிறாய்?

மல்லாகம் பெரியதம்பிரான் கோயில் பெரும் பொங்கல் விஞ்ஞாபனம்

காலம்: 29 - 05 - 94 ஞாயிற்றுக்கிழமை
அதிகாலை: 6 - 00 மணி பெரும் பொங்கல்
நண்பகல்: 12 - 00 மணி பூசை
1 - 00 மணி தீக்குளிப்பு

அடியார்கள் அனைவரும் ஆலயம் வந்து அருள் பெற்றுய்யவும்.

வ. அப்புத்துரை
பெரியதம்பிரான் உபாசகர்.
மல்லாகம்.

(31136)

மரண அறிவித்தல்கள்

கந்தையா வைரமுத்து

கந்தையா வைரமுத்து காலமானார்.

இவர் கொட்டடியைச் சேர்ந்த காலஞ்சென்ற பாக்கியலெட்சுமியின் அன்புக் கணவரும் திரு. K.V. தெய்வேந்திரன் (முன்னைநாள் உதவி முதல்வர்) அவர்களின் ஒன்றுவிட்ட சகோதரரும், திருமதி ச. ஜெகதீஸ்வரி, திருமதி கோ. ராஜேஸ்வரி, செல்வி வை. இரத்தினேஸ்வரி, திரு. K.V. ஜெயலிங்கநாதன் (ஓய்வு பெற்ற மாநகரசபை பதிவுகள் காப்பாளர்), திரு. K.V. ஸ்ரீரங்கநாதன், திருமதி S. யோகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. சபாரெட்ணம், திரு. கோபாலபிள்ளை, திருமதி ஜெ. தவமணிதேவி, திருமதி S. ஸ்ரீராகினி, திரு. சிவானந்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும், சுரேந்திரா, தெய்வேந்திரா, சுமித்திரா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 28-5-94 இன்று பிற்பகல் 2.00 மணிக்கு இல. 126/29' கச்சேரி நல்லூர் வீதியில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
திரு K.V. ஜெயலிங்கநாதன்
(மகன்)

இல. 126/29, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

(31145)

திருமதி சரவணமுத்து சின்னம்மா

திருமதி சரவணமுத்து சின்னம்மா 23-5-94 திங்கட்கிழமை கனடாவில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற வல்லிபுரம் சரவணமுத்துவின் அன்புமனைவியும், சத்தியதேவி (கனடா), சிறிவாமதேவன் (கனடா), கமலாதேவி, காலஞ்சென்ற மகாதேவன், கிருஷ்ணதேவி (லண்டன்) ஆகியோரின் அருமைத் தாயாரும், காலஞ்சென்ற செல்லையா கௌரிதேவி (கனடா), காலஞ்சென்ற செல்வராசா, ஆனந்தகிருஷ்ணன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கனடாவில் இன்று (28-5-94) நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
S கமலராஜ்
(பேரன்)

'சிறீரங்கம்'
வட்டு கிழக்கு,
வட்டுக்கோட்டை.

(31137)

திருமதி பூலோகநாயகி குஞ்சிதபாதம்

யாழ்ப்பாணம் 48/4, பருத்தித்துறை வீதியில் வசித்தவரான திருமதி பூலோகநாயகி குஞ்சிதபாதம் 24-5-94 கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் தங்கம்மாவின் மகளும், மங்கையர்க்கரசி, கைலாயநாயகி, செல்வரத்தினம், இரட்ணதுரை ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற செல்லத்துரை, பரமநாதன், சிவமணி, பபி ஆகியோரின் மைத்துனியும், மாலினி, நளினி, கமலினி ஆகியோரின் அன்புப் பெரிய தாயாரும், செல்வகுமார், சிவகுமார், சண்முககுமார், ரகு, செல்வஸ்ரீ, ஐங்கரன், லட்சுமணன், பபா ஆகியோரின் அன்புமாமியும், நவநீதனின் பாட்டியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 25-05-94 கொழும்பில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவு செய்து ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
ஜெ. காலாரஜனி

66/2, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(31143)

வர்ணகுலசிங்கம் இராசரத்தினம்

(வல்வெட்டித்துறை)

திருகோணமலை சென்றல் றோட் N. A. மார்க்கண்டு அன் பிறதேர்ஸ், கொழும்பு 11, 173 செய்ஸர் வீதி, N. A. மார்க்கண்டு அன் பிறதேர்ஸ், குறொஸ் கன்றி றான்ஸ்போட் சேவிஸ் ஸ்தாபனங்களின் உரிமையாளருமாகிய வர்ணகுலசிங்கம் இராசரத்தினம் அவர்கள் 21 - 05 - 1994 சனிக்கிழமை காலை தமது திருகோணமலை இல்லத்தில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அப்புக்குட்டி - வர்ணகுலசிங்கம் தம்பதிகளின் அருமை மகனும், மங்கையர்க்கரசியின் அன்புக் கணவரும், திருமதி தேவயாணி, திருமதி தாட்சாயினி, செல்வன் தனஞ்சயன் ஆகியோரின் தந்தையும், டாக்டர் ஏ வரப்பிரசாதம் (இங்கிலாந்து), டாக்டர் ம. மனோகர் (காசில் மருத்துவமனை - கொழும்பு) ஆகியோரின் கனிவு மாமனாரும், திரு. அரியரத்தினம், காலஞ்சென்ற விக்கரத்தினம், காலஞ்சென்ற அரசரத்தினம், சரோஜினிதேவி (கென் ஆபிரிக்கா) ஆகியோரின் பாசச் சகோதரரும், சஞ்சீவ், சஞ்சய், சாரா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 14, மத்திய வீதி, உவர்மலை, திருகோணமலை இல்லத்தில் 24-05-1994 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெற்று பூதவுடல் திருகோணமலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

தகவல்:
தனஞ்சயன் இராசரத்தினம்
[மகன்]

[31139]

படையினருக்கு எதிராக

அடிப்படை மனித உரிமை மீறல் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மே 28

மட்டக்களப்பு ஸ்ரீலங்கா பாதுகாப்புப் படைகளின் ஒருங்கிணைப்பு அதிகாரிகள் மீது இலங்கை சட்டத்தரணிகளின் மனித உரிமைகள் நிலையம் அடிப்படை மனித உரிமை மீறல்கள் தொடர்பாக குற்றம் சாட்டியுள்ளது.

இந்த நிலையம் 22 கைதிகள் சம்பந்தப்பட்ட அடிப்படை மனித உரிமை மீறல் வன்முறைகள் தொடர்பாக ஸ்ரீலங்கா உயர் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்துள்ளது.

மட்டக்களப்பு ஸ்ரீலங்கா பாதுகாப்பு படைகளின் இணைப்புக்குழுவின் மேற்பார்வையில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் சார்பில் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (இ-3)

விளையாட்டு நிகழ்வு

ஈ. எஸ். பேரம்பலம் சக நிறுவனத்தின் ஆதரவுடன் யாழ்ப்பாணம் ஜொலிஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கிரிக்கெட் ஆட்டத்தொடரின் கால்இறுதி ஆட்டங்கள் இன்று யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ காலை 8.30 மணி ஜொனியன்ஸ் வி. க. அணி எதிர் மாவிட்டபுரம் பரீஷ் வி. க அணி.

★ பிற்பகல் 1 மணி - ஓக்ட் கோல்ட் வி. க. அணி எதிர் ஜொலி ஸ்ரார்ஸ் வி. க. அணி.

(இ-3)

பண்ணிசை போட்டிகள் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், மே 28

இணுவில் ஸ்ரீ பரராஜ சேகரப் பிள்ளையார் கோவில் வருடாந்த உற்சவத்தை யொட்டி திரு நெறிய தமிழ் மறைக் கழகம் நாளை ஞாயிற்றுக்கிழமை நடத்த விருந்த பண்ணிசைப் போட்டி பின்போடப்பட்டுள்ளதாககழகத்தின் செயலாளர் சோ. பரமசாமி அறிவித்துள்ளார். (இ-3)

ஆங்கில ஆசிரியர் போட்டிப் பரீட்சை

கொழும்பு, மே 28

ஆங்கில ஆசிரியர்களை நியமிக்கும் போட்டிப் பரீட்சை அடுத்த மாதம் 11 ஆம் திகதி நடைபெறும் என பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

சுமார் 50 ஆயிரம் பேர் இப்பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது (இ-எ-6)

ஆலயங்களில்

வண்ணை ஸ்ரீ வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வர சுவாமி கோயில் (வண்ணை சிவன்) ஏகதின இலட்சார்ச்சனைப் பெருவிழா இன்று சனி காலை 6 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை நடைபெறும். மாலை 5-30 மணிக்கு சுவாமி வீதிஉலா இடம்பெறும். (எ - 5)

★ ★ ★

கன்னாகம் வரியப்புலம் ஸ்ரீ மகாமாரி அம்பாள் ஆலய சங்காபிஷேகம் இன்று சனிக்கிழமை காலை நடைபெறும். பகல் அன்னதானம் இடம்பெறும்.

இரவு விசேட பூசைகளைத் தொடர்ந்து அம்பாள் வீதியுலா வருவார். திரு. ஆறுதிருமுருகனின் சமயச் சொற்பொழிவு விசேட மேளக்கச்சேரி, இன்னிசை நிகழ்ச்சி ஆகியனவும் இடம்பெறும். [ஒ-89]

மலத்தியோன் தெளிக்கும்....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரச அதிபரின் ஊடாக வடக்கு கிழக்கு மாகாண சுகாதார அமைச்சிடம் கோரியுள்ளார்.

இதற்கிடையில் பருத்தித்துறை, நாவற்குழி போன்ற மலேரியா கூடுதலாக காணப்படும் பகுதிகளுக்கு உடனடியாக இரண்டு மலத்தியோன் தெளிக்கும் குழுக்கள் நியமிக்கப்பட்டு மலத்தியோன் தெளிக்கும் வேலைகள் நடைபெற்று வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டது. (இ-162)

கண்ணீர் அஞ்சலி

அம்பிகாவதி பாலசுந்தரம்

(உள்ளகக் கணக்காய்வாளர் - நகரசபை, வவுனியா)

22-05-94இல் வவுனியாவில் காலமான செய்தி கேட்டு ஆழ்ந்த கவலையும், அதிர்ச்சியும் அடைகிறோம். அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்,

-வேலும்மயிலும் குடும்பத்தினர்.

நாச்சியார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

[சி/8240]

கண்ணீர் அஞ்சலி

அம்பிகாபதி பாலசுந்தரம்

(உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கத் தலைவர், உள்ளகக் கணக்காய்வாளர் - எழுதுவினைஞர், நகரசபை வவுனியா).

மலர்வு;
12 - 12 - 1941

உதிர்வு;
22 - 05 - 1994

22-05-1994 அன்று வவுனியாவில் காலமாகிய அம்பிகாபதி பாலசுந்தரம் அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினர்க்கு எமது கண்ணீர் அஞ்சலியையும், ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவிக்கிறோம்.

உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கமும்,
யாழ்ப்பாணம் மாநகரசபை
கிளைச்சங்கமும்.

(சி- 8345)

சீதன ஒழிப்பு கூட்டம்

யாழ்ப்பாணம், மே 28

சீதன ஒழிப்பு சம்பந்தமான கூட்டம் ஒன்று இன்று பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும்.

யாழ். மாநகரசபை எல்லைக்கு உட்பட்ட அனைத்து வர்த்தக வாழிபர்களும் கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ். வர்த்தக வாழிபர்கள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. (இ)

கலை நிலா அரங்கு

குருநகர், மே 28

யாழ். பிரதான வீதி திருமறைக் கலா மன்ற அரங்கில் இன்று சனி மாலை 6.45 மணிக்கு 'கலை நிலா அரங்கு' நடைபெறும்.

சங்கீத கலா வித்தகர் திரு எஸ். நாகராசாவின் 'இராகத்துக்கு இராகம்'' இசை நிகழ்ச்சியும் சிறப்பு நிகழ்ச்சியாக முற்றிலும் பெண்கள் கலந்து கொள்ளும் 'வேதத்தின்வெண்புறா' நாட்டுக் கூத்தும் இடம்பெறும். (இ-51)

மண் சரிவுக்கு 15 பேர் பலி

கொழும்பு, மே 28

எகலியகொடவில் அஸ்கன் குவப் பகுதியில் நேற்று இடம்பெற்ற மண்சரிவினால் 15பேர் உயிரிழந்தனர் என எகலியகொட பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-3)

நாளை குறும்பட விழா

விடுதலைப் புலிகளின் நிதர்சனம் நிறுவனத்தின் மாதாந்த வெளியீடான ஒளிவீச்சின் முதலாவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி குறும்பட விழா ஒன்று நடைபெறவுள்ளது.

நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் நான்கு மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இக்குறும்பட விழா இடம்பெறும்.

இன்று

உடுவில், கோப்பாய் கல்விக் கோட்டங்களைச் சேர்ந்த சகல இசை ஆசிரியர்களுக்குமான கூட்டம் ஒன்று இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு இராமநாதன் கல்லூரியில் நடைபெறும்.

பலாலி ஷெல் இருவர் காயம்

யாழ்ப்பாணம், மே 28

பலாலி இராணுவ முகாமில் இருந்து நேற்று இரவு 7 மணிக்கு கட்டுவன், தெல்லிப்பளை, மல்லாகம், சுன்னாகம் பகுதிகளை நோக்கி பரவலாக ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இச்சம்பவத்தின்போது இருவர் காயமடைந்தனர் வீடுகளும் சில சேதமடைந்தன.

சுன்னாகம் காளியபுலத்தில் ஒரு மதில் மேல் விழுந்து வெடித்த ஷெல்லினால் நாரா யணபிள்ளை யோகராசா [வயது 42] என்பவர் காயமடைந்தார். மதிலும் முற்றாகச் சேதமடைந்தது.

மல்லாகம் கோட்டைக்காடு பகுதியில் விழுந்த ஷெல்லினால் ரி. சின்னராசா (வயது 33 என்பவர் காயமடைந்தார்.

காயமடைந்தோர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ-15)

பிளாம்பயான் கப்பல் புறப்பட்டது

யாழ்ப்பாணம், மே 26

கொழும்பில் சிகிச்சை பெற்றுத்திரும்பிய 16 பேருடன் நேற்று பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்த 'பிளாம்பயான்' கப்பல், பயணிகள் மற்றும் நோயாளர்கள் உட்பட 18 பேருடன் நேற்று மாலையே திருகோணமலைக்கு திரும்பியது.

யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் இக்கப்பலில் கொழும்பு சென்றுள்ளார்.

இக்கப்பலில்யாழ்.போதனா வைத்தியசாலைக்கு ஒரு தொகுதி மருந்து வகைகள் எடுத்து வரப்பட்டுள்ளன.

(இ-3-15-167-173)

தொடருக்கான...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

4. நகர்ப்புற வறியவர்கள், தோற்றுவாயும், காரணங்களும்—திரு. ஜீ. எம். செபஸ்தியாம்பிள்ளை.

5. 'நகர்ப்புற வறிய சிறுவர்களும், சமூகப் பொறுப்பும்'— திரு மா. சின்னத்தம்பி. (இ)

அளவெட்டி விநாயகர் வி. க.

நடத்தும்

உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின்

இறுதிப் போட்டியும் பரிசில் வழங்கலும்

திகதி: 29.05.94 ஞாயிறு பி. ப. 2-30மணி

இடம்: மகாஜனக் கல்லூரி மைதானம், இணுவில்.

3ஆம் இடத்திற்கான போட்டி

சென். அன்ரனிஸ் (பாஷையூர்) எதிர் ஞானமுருகன் (மயிலங்காடு)

1ஆம் இடத்திற்கான போட்டி

யங்றோயல் (காங்கேசன்துறை) எதிர் யங்கென்றிசியன் (இளவாலை)

★ ரசிகர்களுக்கு அதிர்ஷ்டத்தின் அடிப்படையில் 3 பரிசில்கள் காத்திருக்கின்றன.

விநாயகர் வி. க,
அளவெட்டி.

(31140)

'A' LEVEL CENTRE

1St. LANE POINT-PEDRO ROAD,
JAFFNA.

விசேட சிங்கள வகுப்பு

ஆரம்பம்: **28-05-1994**

சனி-ஞாயிறு 12-00

ஆசிரியர்: **பியதாச**

[இ-8336]

கைப்பை தவறிவிட்டது

25 - 05 - 1994 அன்று முறிகண்டியில் எனது **K 0294144** இலக்க கடவுச் சீட்டு கொழும்பு-மஸ்கற் செல்வதற்கான விமான பயணச் சீட்டு அடங்கிய கைப்பை தவறிவிட்டது.

கண்டெடுத்தவர்கள்:

S. சந்திவேல், C/o **R** சிவகுருநாதன் சீரணிச் சந்தி, சண்டிலிப்பாய் என்ற விலாசத்தில் தயவு செய்து ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(31133)

கண்ணீர் அஞ்சலி

அம்பிகாபதி பாலசுந்தரம்

(தலைவர் உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கம், எழுதுவினைஞர் வவுனியா நகரசபை)

தோற்றம்:
12-12-1941

மறைவு:
22-05-1994

22-05-1994 அன்று வவுனியாவில் காலமாகிய அமரர் திரு. அம்பிகாபதி பாலசுந்தரம் அவர்களைப் பிரிந்து துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற
ஆணையாளரும், பணியாளரும்.

(31142)

மரண அறிவித்தல்கள்

மைக்கேல் ஸ்ரீபன் ஜோர்ஜ்

மைக்கேல் ஸ்ரீபன் ஜோர்ஜ் 24 - 5 - 94 இல் இத்தாலியில் காலமானார். இவர் ஆனைக்கோட்டை காலஞ்சென்ற மைக்கேல் ஞானப்பு தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும், மேரிக்ளெஸ் அவர்களின் அன்புக் கணவரும், சுபோதினி (கண்டிக்குளி மகளிர் கல்லூரி), தர்ஷினி (றிபேக் கல்லூரி சாவகச்சேரி), யூட்ஸன் (புனித சம்பத்திரிசியார் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற ஜீவானந்தம், கருணாநிதி, றஜனி அமலதாஸ், பிறேமலா அன்ரன், வெலிசியா, மைக்கேல் ஆகியோரின் சகோதரரும், சின்னப்பு அவர்களின் மருமகனும் ஆவார்.

இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மீ. கருணாநிதி

சாவகச்சேரி.

(31146)

தோமஸ் அன்ரனி பெர்னாண்டோ

(பெர்னாண்டோ கிளாக்கர்)

மாதகல் — மண்டைதீவு

தோமஸ் அன்ரனி பெர்னாண்டோ அவர்கள் 25-05-94 புதன்கிழமை காலமானார். அன்னாரின் பூதவுடல் 28-05-94 சனிக்கிழமை (இன்று) பி. ப. 3.00 மணிக்கு 79, கதீற்றல் வீதி, யாழ்ப்பாணத்தில் (ஆயர் இல்லம் முன்பாக) உள்ள இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் இடம்பெறும் இரங்கல் திருப்பலியின் பின்னர் யாழ். புனித மரியன்னை பேராலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:-
பெ: பிரான்சிஸ்
(மகன்)

79, கதீற்றல் வீதி,
(புனித சாள்ஸ் வித்தியாலயம் அருகில்)
யாழ்ப்பாணம்.

(31147)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 393/1 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 28 - 05 - 1994 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது